பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:01 01.11.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

## சம்பள உயர்வு கோரி சுகாதாரச் சேவை தொழிற்சங்கம் போராட்டம்

கிழமையில் ஐந்து நாட்கள் வேலை, சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் இன்று வைத்தியசாலையின் முன்பு போராட்டம் ஒன்றை நடத்தினர். காலை 7.00 தொடக்கம் பி.ப 12.00 வரை சுகாதார சேவை தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதே கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்களும் இன்று போராட்டம் நடத்தினர்.



## பிணைக் கைதியாக காணாமல் போன இலங்கையர்

ஹமாஸுடனான மோதலைத் தொடர்ந்து காணாமல் போனதாகக் கூறப்படும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த சுஜித் பண்டார யாதவர ஹமாஸ் போராளிகளால் பிணைக் கைதிகளில் சிக்கியிருக்கலாம் என இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அறிவித்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மற்றும் சுஜித் பண்டார யாதவரவின் குடும்பத்தினருக்கும்அறிவிக்கப்பட்டுள்ளதாக தூதுவர் பண்டார தெரிவித்துள்ளார்.

சுஜித் பண்டார யாதவரவின் பிள்ளைகளிடம் இருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகள் (02)



## இலங்கையில் இந்திய நிதியமைச்சர்

இந்திய மத்திய நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்களுக்கான அமைச்சர் ஸ்ரீமதி.நிர்மலா சீதாராமன் மூன்று நாட்களுக்கு இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வந்தடைந்தார்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் 200 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், நவம்பர் 2 ஆம் திகதி, சுகததாச உள்விளையாட்டு அரங்கில், இலங்கை அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நாம் 200' நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சீதாராமன் சிறப்புரையாற்றுவார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூத்த உறுப்பினர்கள் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை (02)

## வட் வரியை 18 சதவீதமாக உயர்த்த அமைச்சரவை ஒப்புதல்

2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரியை (VAT) தற்போதைய 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன சற்று முன்னர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி வருமானம் 50 சதவிகிதம் உயர்ந்திருந்தாலும் அத்தகைய வருமானம் சர்வதேச நாணய நிதியம் (IMF) நிர்ணயித்த இலக்குகளை இன்னும் எட்டவில்லை என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட VAT க்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதன் பின்னணியில் உள்ள காரணத்தை விளக்கிய குணவர்தன, "IMF நிர்ணயித்த வருமான இலக்குகளை எங்களால் பூர்த்தி செய்ய முடியாததால், இலங்கைக்கு இதுவரை IMF இரண்டாவது தவணை கிடைக்கவில்லை.

VAT விகிதத்தை அதிகரிப்பதுடன், முன்னர் VAT இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் புதிய விகிதம் பொருந்தும் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## யாழில் கொள்ளைக் கும்பலை கைது செய்த பொலிஸ் பரிசோதகர் மேனன் தலையிலான குழு

கேதார கௌரி விரத ஆலய வழிபாட்டுக்கு செல்லும் பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 10 தங்கப் பவுண் நகைகள், கைப்பைகள், தொலைபேசிகள் மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன கைப் பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் விரத வழிபாட்டுக்கு ஆலயம் செல்லும் பெண்களை (02)



'பேசாப் பொருளையும் பேசும் குரல்'

## பிணைக் கைதியாக...

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இஸ்ரேல் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலத்துடன் பொருத்தமாக உள்ளதா என்பதை கண்டறிய விசாரணைகள் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஹமாஸ் போராளிகளால் 222 பணயக்கைதிகள் இருப்பதாக முதலில் அறிவிக்கப்பட்ட போதிலும், பணயக்கைதிகளின் எண்ணிக்கை 239 ஆக அதிகரித்துள்ளது, அவர்களில் நான்கு பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தூதுவர் தெரிவித்தார். தூதுவர் பண்டார, சுஜித் பண்டார யாதவரவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இஸ்ரேலிய அதிகாரிகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

## வடமாகாணத்தில் கண்டல் தாவர மீளுருவாக்கம்





வடமாகாணத்தில் ஒரு லட்சம் (100 000) கண்டல் தாவரங்களை மீளுருவாக்கம் செய்யும் நோக்கத்துடன் செயற்படும் 'Save a Life' நிறுவனம் இது வரை 7800 கண்டல் தாவரங்களை நடுகை செய்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக கண்டல் தாவர மீளுருவாக்கத்திற்கான விதைகளை சேகரிப்பதில் அவ் அமைப்பினரும் தன்னார்வ இளைஞர்களும் சேர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழில் கொள்ளைக் கும்பலை கைது செய்த.......

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான பொலிஸாரே கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

## இலங்கையில்...

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை உத்தியோக பூர்வமாகச் சந்ப்பார். கண்டியில் உள்ள ஸ்ரீ தலதாமாளிகை (புனித பல்லக்கு ஆலயம்), அனுராதபுரத்தில் உள்ள ஜெயஸ்ரீ மஹா போதி, திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் கோயில் , யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்வார். யாழ்ப்பாண கலாசார மையம் மற்றும் யாழ் பொது நூலகம் ஆகியவற்றை பார்வையிட உள்ளார்.

## இணுவிலில் மோட்டார் சைக்கிள் திருட்டு

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடி செல்லப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரமும் இணுவில் பகுதியில் இவ்வாறான ஒரு திருட்டு சம்பவம் இடம் பெற்றிருந்த நிலையில் நேற்று முன் தினம் இத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாட்களில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதோடு திருடப்படும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி வழிப்பறிகளும் கொள்ளைகளும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணீர் அஞ்சலி...

## அமரர் பாலசிங்கம் வெற்றிவேல்



விண்ணில் 15.11.1950 மண்ணில் 30.10.2023

அல்வாய் தெற்கு ரதி மஹாலினைச் சேர்ந்த பாலசிங்கம் வெற்றிவேல் (ஓய்வுநிலை அதிபர் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை) கடந்த திங்கட்கிழமை 30.10.2023 காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்/சாரதாமணி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை/தங்கப்பொன் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ரதியின் அன்புக்கணவரும், திருமதி.லி.நிருத்திகா (பிரதம முகாமைத்துவ உதவியாளர் பருத்தித்துறை பிரதேச சபை) வெற்றி துஷ்யந்தன் (ஊடகவியலாளர்), வெற்றி சிந்துஜன் (இசையமைப்பாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி.வி.சாரதாவதி, மணிவண்ணன், திருமதி.த.கலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லிங்கனதாஸ் (அதிபர் இமையாணன் அ.த.க பாடசாலை), திருமதி.து.தாட்ஷாயணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கரவெட்டி பிரதேச சபை) திருமதி சி.டிலானி ஆகியோரின் மாமனாரும்,ஆருஷா, ஆதர்ஷன், வைஷ்ணு பிரபாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 31.10.2023 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்...

தீம்புனல் குழுமம்

# தீவிரவாத குற்றச்சாட்டில் குடியுரிமையைப் பறிக்க முடியாது

பயங்கரவாதக் குற்றத்திற்காக ஒருவரின் குடியுரிமையைப் பறிக்கும் அரசின் முடிவை அவுஸ்திரேலியாவின் உச்சநீதிமன்றம் இன்று புதன்கிழமை இரத்து செய்தது.

இந்தத் தீர்ப்பு, தீவிரவாதம் தொடர்பான காரணங்களுக்காக இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களின் அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பறிக்க ஒரு அரசாங்க அமைச்சரை அனுமதிக்கும் சட்டத்திற்கு ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது அடியாகும்.

அல்ஜீரியாவில் பிறந்த மதகுரு அப்துல் பென்ப்ரிகா சிறையில் இருந்து விடுவிக்கப்படும் போது, அவரை நாடு கடத்துவதையும் அரசாங்கம் தடுக்கிறது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் குடியுரிமையைப் பறிக்கும் அதிகாரத்தை உள்துறை அமைச்சருக்கு வழங்கிய சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

கிரிமினல் குற்றத்தை தண்டிக்கும் நீதித்துறை செயல்பாட்டை அமைச்சர் திறம்பட செயல்படுத்தி வருவதாக பெரும்பான்மையானோர் கண்டறிந்தனர்.

கடந்த அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் தொடர்பான தீர்ப்பைத் தனது அரசாங்கம் ஆராயும் என்று பிரதமர் அந்தோனி அல்பானீஸ் கூறினார்.

அரசியலமைப்பு வழக்கறிஞர் ஜார்ஜ் வில்லியம்ஸ், இந்த முடிவு தனக்கு ஆச்சரியமாக இல்லை என்று கூறினார்.

இது அவுஸ்தி ரேலியாவில் அதிகாரப்பிரிவின் அடிப்படை மீறலாகும், இது குற்றவாளிகளை தீர்ப்பது மற்றும் தண்டனையை நிர்ணயிப்பது நீதிமன்றங்களால் இருக்க வேண்டும், பாராளுமன்றத்தில் உள்ளவர்களால் அல்ல என்று வில்லியம்ஸ் கூறினார்.



# ஆட்சியை விட ஜனநாயகத்திற்கே தி.மு.க ஆதரவு

## பா.ஜ.கவுக்கு தோல்வி பயம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை திருவான்மியூரில் தி.மு.க எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி இல்ல திருமணவிழா நடைபெற்றது. அதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

பின்னர், விழாவில் பேசிய அவர் எதிர்க்கட்சி தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக்கேட்பது குறித்து விமர்சித்துள்ளார்.

மேடையில் பேசிய முதலமைச்சர், "இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது, எமர்ஜென்சி கொண்டு வரப்பட்டபோது ஆட்சியைவிட ஜனநாயகத்திற்கே ஆதரவு எனக் கூறியவர் கலைஞர். அவர் எங்களுக்கு ஆட்சியை ஜனநாயகத்திற்கே ஆதரவு என கூறியதால், அந்த வழியில் ஆட்சியைவிட ஜனநாயகத்திற்கே தி.மு.க ஆதரவு வழங்கும்.

இந்திராகாந்தி கொண்டு வந்த எமர்ஜென்சியை எதிர்க்கக் கூடாது என தூது வந்தது.

அப்போது பேசிய கலைஞர் நாங்கள் ஆட்சிக்காக இல்லை, ஜனநாயகத்தை நம்பி உள்ளோம். உயிரே போனாலும் எமர்ஜென்சியை எதிர்த்து நிற்போம் என்றார்.

ஆனால், தற்போது நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா? மக்களாட்சி நீடிக்குமா? என்ற நிலை உள்ளது.



மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு எதிர்க்கட்சிகளை மிரட்டுவது, எதிராக கருத்துகூறுபவர்களை அமலாக்கத்துறை சோதனை மூலம் அச்சுறுத்துவது உள்ளிட்ட செயல்களைக் கொண்டுள்ளது. இப்போது எதிர்க்கட்சி தலைவர்களின் செல்போன் ஒட்டுக்கேட்பதும் அரங்கேறி வருகிறது.

செல்போன் ஒட்டுக் கேட்பு தொடர்பாக ஆப்பிள் நிறுவனமே எதிர்க் கட்சி தலைவர்களை எச்சரித்துள்ளது. இதெல்லாம் பா.ஜ.கவின் தோல்வி பயத்தையே காட்டுகிறது என்றார்.

# உண்மையை பேசாத அனைத்து நாடுகளும் ஊமை பிசாசுகள்– துருக்கி ஜனாதிபதி

இஸ்ரேல்- பாலஸ்தீனம் ஆதரவு அமைப்பாக ஹமாஸ் இடையே போர் நடைபெற்று வரும் நிலையில், இரு தரப்பிலும் பல ஆயிரம் வீரர்கள் மற்றும் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போரை நிறுத்த வேண்டும் என பல நாடுகள் மற்றும் ஐ.நா அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் தாக்குதல் குறித்து உண்மையைப் பேசாத அனைத்து நாடுகள் ஊமைப் பிசாசுகள் என்று துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காஸாவில் நிகழ்வது இஸ்ரேல் நாட்டில் நீதி மற்றும் படுகொலைகள் ஆகும். இந்தப் போர் நிறுத்தப்படும் வரை எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்? மேற்கு நாடுகள் மனிதாபிமான உதவிக் கப்பல்களுக்குப் பதிலாக இஸ்ரேல் நாட்டிற்கு விமானம் தாங்கிகப்பல்கள் அனுப்பி வருகின்றன. இது இரட்டைவேடம். இதில், பல பெண்கள், குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர், இதைக் கண்டு அமைதியாக இருக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் தளபதி

இஸ்ரேல் இராணுவத்தின் இடைவிடாத குண்டு மழையால் காஸாவில் உள்ளகுடியிருப்புகள், கட்டடங்கள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்டவை தரைமட்டமாகின.

இந்த நிலையில், ஹமாசின் மத்திய ஜபாலியா படை தளபதி இப்ராஹிம் பியாரி, கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. பொதுமக்கள் அதிகம் வசிக்கக் கூடிய ஜபாலியா பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து, செவ்வாய்க்கிழமையன்று அங்கு இஸ்ரேல் தீவிர தாக்குதல் தொடுத்தது.

அத்துடன், ஹமாஸின் சுரங்கங்கள், ஏவுகணைத் தளங்கள் அழிக்கப்பட்டன. இதில், இப்ராஹிம் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேல் வீசிய 6 சக்தி வாய்ந்த குண்டுகள் குடியிருப்புகள் மீது விழுந்ததில் 400 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல் தாக்குதலால் பாலஸ்தீனத்தில் இதுவரை 8,500 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

அதேவேளையில், ஹமாஸ் ஆயுதக் குழுவினரும் இஸ்ரேல் ராணுவத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தீவிர தாக்குதலில் இறங்கியுள்ளது. இதில், நேற்று ஒரேநாளில் 11 இஸ்ரேல் இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும், போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 317 இஸ்ரேல் இராணுவத்தினர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

வரலாற்றில் இஸ்ரேல் சந்தித்த போர்களில் இராணுவ வீரர்கள் அதிக எண்ணிக்கையில் உயிரிழந்தது இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் இரு தரப்பிலும் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதால் அப்பாவி பொதுமக்கள் பலியாவது தொடர்கதையாகியுள்ளது.

# சோமாலியாவில் உதவி பணிக்கான ஆணையை ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் புதுப்பித்துள்ளது

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் செவ்வாய்க்கிழமை, சோமாலியாவில் உள்ள ஐ.நா உதவிக் குழுவின் (UNSOM) ஆணையை, ஒக். 31, 2024 வரை ஓராண்டுக்கு புதுப்பிக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

தீர்மானம் 2705,15 உறுப்பினர்களைக் கொண்ட சபையால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது, சோமாலியா மற்றும் சோமாலியாவின் கூட்டாட்சி உறுப்பு.



நாடுகளின் கூட்டாட்சி அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து, சோமாலியா முழுவதும் அதன் இருப்பைத் தொடர்ந்து பராமரிக்கவும் வலுப்படுத்தவும் UNSOM ஐக் கோருகிறது.

இது UNSOM ஐ தொடர்ந்து ஒருங்கிணைக்க ஐ.நா முயற்சிகளை ஊக்குவிக்கிறது,

மேலும் சோமாலியாவில் அரசைக் கட்டியெழுப்புவதற்கும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும் தொடர்புடைய பகுதிகளில் கூட்டு அணுகுமுறைகள் மற்றும் கூட்டு நிரலாக்கத்தை அதிகப்படுத்துகிறது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

## வாசகப் பெருந்தகைகளுக்கு வணக்கம்

உங்கள் அபிமானத் தீம்புனல் இன்று முதல் தின சரி மாலைப்பதிப்பாக வெளிவருகிறது.

இன்றைய செய்திகளை இன்றே படித்திட தீம் புனல் உதவுகிறது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்பாட்டை முற்று முழுதுமாகப் பயன்படுத்தினால் மட்டுமே வாசகர்களுடன் இணைந்திருக்க முடியும் என் பதை உணர்ந்த தீம்புனல் குழுமம் தினமும் மாலை யில் உங்களைச் சந்திக்கிறது.

இலத்திரனியல் ஊடகங்களுடன் போட்டி போட்டு செய்திகளைத் தருவதற்கு தீம்புனல் கடுமையாக முயற்சி செய்யும் என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

# நாளை முதல் வேலை நிறுத்தப் போராட்டம்

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளை உள்ளடக்கி மாகாண மட்டத்தில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங் கம் தெரிவித்துள்ளது.

இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்ட அரச வைத்திய அதிகா ரிகள் சங்கத்தின் செயலா ளர் டொக்டர் ஹரித அலுத்கே இதனை தெரி வித்தார்.

இதற்கமைய 24 மணித் தியால அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஊவா மாகா ணத்திலுள்ள அனைத்து அரச வைத்தியசாலைக ளின் வைத்தியர்களும் நாளை (02) வேலைநிறுத் தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலை களிலும் எதிர்வரும் 3 ஆம் திகதியும், வடமேற்கு மாகாணத்தில் 6 ஆம் திக தியும், சப்ரகமுவ மாகா ணத்தில் 7 ஆம் திகதியும் வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மத்திய மாகாணம் மற் றும் கிழக்கு மாகாணத் தில் 8 ஆம் திகதியும் தென் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாண வைத்திய சாலைகளின் வைத்தியர் கள் 9 ஆம் திகதியும் குறித்த வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, எதிர் வரும் 10 ஆம் திகதி மேல் மாகாண அரச வைத்திய சாலைகளின் வைத்தியர் கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள் ளது.

## தினேஷ் ஷாஃப்டரின் மரணம் ஒரு கொலை

பிரபல வர்த்தகர தினேஷ் ஷாஃப்டரின் மரணம் அவ ரது கழுத்து மற்றும் முகப் பகுதியில் செலுத்தப்பட்ட வெளிப்புற அழுத்தத்தினால் ஏற்பட்டதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று தீர்மானித்துள்ளது.

இதன்படி, இச்சம்பவத் தின் மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த நீதவான், குறித்த சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னி லைப்படுத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத் தின் (சிஐடி) பணிப்பாள ருக்கு உத்தரவிட்டார்.

மறைந்த வர்த்தகர் ஷாஃப்டரின் மரணத்திற் கான உண்மையான கார ணத்தை வெளிக்கொணர நியமிக்கப்பட்ட நீதித் துறை வைத்திய அதிகா ரிகள் அடங்கிய ஐவர் அடங்கிய நிபுணர் குழு, பிரேத பரிசோதனைகள் தொடர்பான தனது அறிக்கையை செவ்வாய்க் கிழமை கொழும்பு மேல திக நீதவான் நீதி மன்றில் சமர்ப்பித்தது.

எவ்வாறாயினும், பிரேத பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அது தொடர்பான உண்மைகளை முன்வைக்க தமது சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்குமாறு உயிரிழந்த வர்த்தகரின் உறவினர்கள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த மேலதிக நீத வான் ராஜீந்திர ஜயசூரிய, பிரேத பரிசோதனையின் போது ஒருவரின் மரணத் திற்கான உண்மையான காரணத்தை வெளிக்கொ ணருவது மாத்திரமே நடை பெறுவதாகவும் அதற்கான எந்த ஏற்பாடும் சட்டத் தில் இல்லை எனவும் சுட் டிக்காட்டினார். இந்த விவகாரம் தொடர்பான உண்மைகளை முன்வைக்க வெளித்தரப்பினரை அனு மதிக்கிறது. இதனால், தற் போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ள மறைந்த வர்த்தகரின் சட லத்தை அவரது குடும்ப உறுப்பினர்களிடம் ஒப் படைக்க நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புல னாய்வு திணைக்களத்திற்கு (CID) மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# மீண்டும் ஆரம்பமானது 785/1 பேரூந்து சேவை

காரைநகரில் இருந்து பயணத்தைத் தொடங்கி யாழ்ப்பாணம் சென்று மீண் டும் மதியம் 1.20 இற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து காரை நகரை சென்றடையும் 785/1 பேரூந்து சேவை இன்று மீண்டும் ஆரம்பமானது.

கடந்த காலங்களில் காரைநகர்-யாழ்ப் பாணம் பேரூந்து சேவையின் ஒரு பகுதி யாக காரைநகர்- மூளாய் பிள்ளையார் கோவிலடி - டச்சு வீதி ஊடாக சித்தன் கேணி யாழ்ப்பாணம் வீதி - வட்டுக் கோட்டை சந்தி- அராலி செட்டியார் மடம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பேரூந்து முன் னர் ஏற்பட்ட கொரோனா பேரிடர், பொரு ளாதார நெருக் கடி மற்றும் ஏனைய சில காரணங்களால் தனது பயணத்தைத் தொடர்வதில் சிர மங்களை எதிர்கொண்டு தடைப்பட்டது.

இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். மேலும் டச்சு வீதி யின் சேதங்கள் காரணமாகவும் பஸ் போக்குவரத்து செய்ய முடியாத நிலை சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து கடந்த வாரம் டச்சு வீதி புனரமைக்கப்பட்டதோடு பஸ் போக் குவரத்தினை முன்னெடுப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

# மனைவியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வேறுபெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயன்றவர் கைது!

மனைவியின் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி மற்றொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயன்ற யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த நபரை குடிவரவு திணைக்களத்தி னர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பகுதி யைச் சேர்ந்த சந்தேகநபர், தனது ஐந்து வயது மகன் மற்றும் அவரது மனைவி என குறிப்பிடப்பட்ட காங் கேசன்துறையைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் ஒருவருடன் இத் தாலி செல்வதற்காக நேற்று மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றார். 1.45 மணிக்கு அவர்கள் விமானத்தில் பயணிக்கவிருந்தனர்.

அவர்கள் குடியகல்வு சாளரத்தில் தமது பயண ஆவணங்களை வழங்கிய போது, அவர்களின் நம்ப கத்தன்மை குறித்து சந்தே கங்கள் எழத் தொடங்கின. அவர்கள் மூவரும் எல்லை ஆய்வுப் பிரிவிடம் பரிந்து ரைக்கப்பட்டனர்.

அங்கு நடத்தப்பட்ட தொழிநுட்ப சோதனைகள் மற்றும் முதற்கட்ட விசார ணைகளின்போது, இந்த சிறு குழந்தை, சந்தேக நப ருடையது எனினும் இந்த பெண் அவர்களது குடும் பத்தின் மனைவியோ அல் லது தாயோ அல்ல என் றும் வேறு பெண் என்றும் தெரிய வந்தது.

இந்த நபர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்தபோது இத் தாலியில் உள்ள தனது மனைவியின் கடவுச் சீட் டைக் கொண்டு வந்து கட் டுநாயக்க விமான நிலை யத்தின் குடிவரவு முத்தி ரையை போலியாக தயா ரித்து வைத்தி ருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

அந்த கடவுச்சீட்டை பயன்படுத்தி வேறொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயற் சித்த அவர், இதற்கு முன் னர் மனைவியின் கடவுச் சீட்டை பயன்படுத்தி மேலும் ஒரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் சென்றது தெரியவந்துள் ளது. அதன்படி, குடிவரவு குடியகழ்வு திணைக்களத் தினரால் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட் டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவி னரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

# சினோபெக் எரிபொருள் விலையில் மாற்றம்

சினோபெக் நிறுவனம் தமது எரிபொருட்களின் விலைகளில் திருத்தத்தை மேற்கொண்டுள்ளது. ஒக்டேன் 92 ரக பெற்றோல் 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 356 ரூபாவாக குறைந்துள்ளது. ஒக்டேன் 95 ரக பெற்றோல் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 423 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒடோ டீசல் 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 356 ரூபாவாக அதிகரித்துள்ளது. சூப்பர் டீசல் 14 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 431 ரூபாவாக அதிகரித்துள்ளது.



# ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைக்க விலைமனுக் கோரல்

ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைக் கொண்டிருப்பதாகவும் அதற்கமைவாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சு ஊடகங்கள் மற்றும் இணையத் தளங்களைப் பயன்படுத்தி இந்த டெண்டர் அழைப்புப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தர் நியமனம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் எம். சுனில் சாந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு (PMD) தெரிவித்துள்ளது.

நவம்பர் 02, 2023 முதல் மூன்று (03) ஆண்டுகளுக்கு துணைவேந்தராக பேராசி ரியர் எம்.சுனில் சாந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

# சீனாவைப் பாராட்டும் சரத் வீரசேகர

அமெரிக்கா செல்வதற்கு விஸா மறுக்கப்பட்ட ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, ஆசியாவின் தவிர்க்க முடியாத, நம்பகமான நண்பன் என சீனாவை குறிப்பிட்டு பாராட்டு மழை பொழிந்துள்ளார்.

சமீபத்தில் சீனாவில் நடைபெற்ற BOAO உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், ஆசிய நாடுகளுக்கு இடையேயான பிணைப்பை மேற்கத்திய உலகம் ஒரு போதும் புரிந்து கொள்ளாது என்றார்.

"இது வர்த்தகம் மற்றும் முக்கியமாக பௌத்தம் மூலம் பரிணமித்து வளர்க்கப்படுகிறது. சீனா, ஆசியாவின் தவிர்க்கமுடியாத மற்றும் நம்பகமான நண்பராக இருந்து வருகிறது.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவ நாடான சீனா, மனித உரிமைகள்



பேரவையில் இலங்கைக்கு தொடர்ந்து அளித்துவரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உலகின் மிக இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பை நாங்கள் தோற்கடித்தபோது மேற்கத்திய நாடுகளால் இழிவுபடுத்தப்பட்டோம், ஆனால் சீனா எப்போதும் எங்களுக்கு ஆதரவாக நிற்கிறது," என்று அவர் கூறினார். அண்மையில், பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்குத் தலைமை தாங்கும் இலங்கை எம்.பிக்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்திற்காக வீரசேகரவுக்கு அமெரிக்கா செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. வீரசேகர தேசிய பாதுகாப்புக்குழுவின் தலைவராக உள்ளார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 100,000 யூரோ ஒதுக்கீடு

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் 100,000 யூரோக்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேல்மாகாணங்களில் மிகமோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 15,000 பேர் இதனால் பயனடைவார்கள்.

நிவாரணப் பொருட்கள், பண மானியங்கள் மற்றும் சுகாதார மேம்பாட்டுப் பிரச்சாரங்களை வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு (SLRCS) இந்த நிதி உதவும். வெள்ளம் சூழ்ந்த பகுதிகள் மற்றும் கிணறுகளை சுத்தப்படுத்துதல் மற்றும் காயமடைந்த நபர்களுக்கு உதவ மருத்துவ முகாம்களை நிறுவுதல் ஆகியவற்றிலும் இந்த உதவி கவனம் செலுத்தும்.



இந்த நிதியானது சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் (IFRC) பேரிடர் மறுமொழி அவசர நிதிக்கு (DREF) ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒட்டுமொத்த பங்களிப்பின் ஒரு பகுதியாகும்.

# சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு ஆரம்பம்

பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகியது.

இதன் முதல் கணக்கெடுப்பு ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதலாவது கட்டிடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு குடிசன மதிப்பீட்டில் தரவு சேகரிப்புக்கு அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் டெப்லெட் கணினிகள் பயன்படுத்துவது விசேட அம்சமாகும். இதே வேளை இறுதியாக சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு 2012 இல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மயிலத்தமடு, மாதவனை பகுதியில் 47 ஆவது நாளாகப் போராட்டம்

மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் பெரும்பான்மையின அத்துமீறிய குடியேற்றவாசிகளினால் பல்வேறு அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் அங்கு உயிர்ப்பலிகள் ஏற்படுவதற்கான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மயிலத்தமடு, மாதவனைப் பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டமானது 47 ஆவது நாளாகவும் இன்றும் நடைபெற்று வருகின்றது. சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய தினமும் கால்நடை பண்ணையாளர்களின் குடும்பம் சகிதமாக பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது மேய்ச்சல் தரை காணிகளில் தொடர்ச்சியான அத்துமீறல்கள் முன்னெடுக்கப்படும் நிலைமையே காணப்படுவதாகவும் ஜனாதிபதி தமக்கு வழங்கிய உறுதிமொழிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லையெனவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தமது மேய்ச்சல் தரைப்பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பில் இதுவரையில் நடவடிக்கையெடுக்காத பொலிஸார் தமது கோரிக்கையினை வலியுறுத்தி முன்னெடுத்த போராட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பண்ணையாளர்கள் கவலையைத் தெரிவித்தனர்.

மயிலத்தமடு,மாதவனை பகுதியில் பெரும்பான்மையின அத்துமீறிய குடியேற்ற செயற்பாட்டாளர்கள் அப்பகுதியில் பல்வேறு அட்டூழியங்களை செய்து வருவதாகவும் வாய்பேச முடியாத கால்நடைகளை கொடுமைப்படுத்தி வருவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இதுவரையில் அத்துமீறிய குடியேற்ற செயற்பாட்டாளர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காத நிலையில் தாம் வாழ்வாதாரத்தினை இழந்துள்ளதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.



# ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்குப் பாராட்டு

ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களை இலங்கையின் தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் ஏற்பாட்டில் கொழும்பில் உள்ள இலங்கை ஒலிம்பிக் இல்லத்தில் உள்ள ஹேமசிறி பெர்னாண்டோ கேட்போர் கூடத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. ஆசிய விளையாட்டு விழாவில் போட்டியிட்ட 45 நாடுகள் மற்றும் பிரதேசங்களின் தரவரிசையில் இலங்கை 26 ஆவது இடத்தைப் பிடித் தது. ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை இலங்கை வீரர்கள் வென்றனர்.




பெண்களுக்கான 800 மீற்றர் இறுதிப் போட்டியில் தருஷி கருணாரத்னா 2 நிமி டம் 3.20 வினாடிகளில் ஓடி தங்கப் பதக்கத்தை வென்றார். நதீஷாவின் தில்ஹானி லேகம்கே 61.57 மீற்றர் எறிந்து பெண்களுக்கான ஈட்டி எறிதல் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார், அதேவேளை இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்ததையடுத்து மற்றைய இரண்டாவது இடத்திற்கான விருது மகளிர் கிரிக்கெட் அணிக்கு கிடைத்தது. பின்னர் நாட்டின் 4x400 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியில் இரு அணிகளுக்கும் வெண்கலப் பதக்கங்கள் சென்றன. "2014 க்குப் பிறகு ஒரு ஆசியப் பதக்கம் மற்றும் 2006 க்குப் பிறகு தடகளப் பதக்கங்கள் இலங்கை விளையாட்டு வீரர்களுக்கும் அதன் எதிர் காலத்திற்கும் ஒரு புதிய வாழ்க்கை குத்தகையை அளிக்கிறது" என்று செயலாளர் நாயகம் மேக்ஸ் வெல்டிசில்வா கூறினார்.

---

## எட்டாவது முறையாக பலோன் டி ஓர் விருதை வென்ற மெஸ்ஸி

கால்பந்து விளையாட்டின் ஆஸ்கர் விருது போல் பார்க்கப்படும் விருதாக பலோன் டி ஓர் விருது உள்ளது.

ஆண்டு தோறும் சிறந்த வீரர், வீராங்கனைக்கு வழங்கப்படும் இந்த விருதை நட்சத்திர கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி தொடர்ந்து 8 ஆவது முறையாக வென்றுள்ளார்.

இந்த ஆண்டுக்காக பரிந்துரைக்கப்பட்ட வீரர், வீராங்கனைகள் என மொத்தம் 60 பேர் இடம்பிடித்த பட்டியலில் மெஸ்ஸி வென்றுள்ளார்.



ஆர்ஜென்ரீனா அணி கப்டனாக இருந்து வரும் மெஸ்ஸி தலைமையில், கடந்த ஆண்டில் 44 ஆண்டுகள் கழித்து ஆர்ஜென்ரீனா அணி உலகக் கோப்பை சாம்பியன்பட்டத்தைச் வென்றது.

இந்த உலகக் கோப்பைத் தொடரில் 7 கோல்களை அடித்திருந்த மெஸ்ஸி அணியையும் சிறப்பாகவழி நடத்தினார்.

இந்த விருதுக்கு அதிக முறை பரிந்துரைக்கப்பட்ட வீரர் என்ற சாதனையை மெஸ்ஸி வசமே உள்ளது படைத்திருந்தார்.

அத்துடன் அதிகமுறை இந்த விருதை வென்றவராகவும் இவரே உள்ளார்.

முதல் முறையாக 2009 இல் இந்த விருதை வென்ற மெஸ்ஸி அதன் பின்னர் 2010, 2011, 2012, 2015, 2019, 2021 வரை தொடர்ச்சியாக விருது வென்ற மெஸ்ஸி தற்போது 2013 இல் விருது வென்றுள்ளார்.

## சவுதியில் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

சவுதி அரேபியா 2034 உலகக் கோப்பையை நடத்தும் வரிசையில் உள்ளது, போட்டியை நடத்துவதில் ராஜ்யம் ஒரே "ஆர்வத்தை" சமர்ப்பித்ததாக பீபா அறிவித்ததை அடுத்து அனைத்து தொழில்நுட்ப அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், அடுத்த ஆண்டு இறுதியில் இந்த முடிவு அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படும்.

கால்பந்து மற்றும் ஃபார்முலா ஒன் மற்றும் கோல்ஃப் ஆகியவற்றில் அதிக முதலீடு செய்துள்ள சவுதி அரேபியா, ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் மொராக்கோ இடையே மூன்று போட்டிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் 2030 நிகழ்விற்கான முன்னோடியில்லாத ட்ரை-கான்டினென்டல் வரிசையிலிருந்து பொறுப்பேற்க உள்ளது.

உலகக் கோப்பையை நடத்துவதற்கான உரிமையைப் பெறுவது, பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானிடம் இருந்து நேரடியாக வெளிப்படும் கொள்கை, விளையாட்டு உலகின் மையத்தில் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்வதற்கும், அதன் எதிர்ப்பாளர்களின் கூற்றுப்படி, சர்வதேச கவனத்தைத் திசை திருப்புவதற்கும் சவுதி அரேபியாவின் சமீபத்திய படியாகும். அதன் மனித உரிமை மீறல்களில் இருந்து.

டிசம்பர் இறுதியில் அடுத்த கிளப் உலகக் கோப்பை மற்றும் 2027 ஆசிய கோப்பையை நடத்த நாடு ஏற்கெனவே தயாராகி வருகிறது.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 01.11.2023 அன்று வெளியிடப்பட்டது.